வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—செங்கேணி பழனி

தேதி 01.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம் மற்றும் வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டத்தை 2025-26-ஆம் நிதியாண்டு வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், இதழ்கள், மற்றும் கல்வி சார்ந்த படைப்புகளை இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யும் வகையில் ஒரே நாடு-ஒரே சந்தா திட்டத்தை மத்திய அரசு தொடங்கி உள்ளது.

எதிர்கால சீர்திருத்தங்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நடப்பு 2025-ஆம் ஆண்டை சீர்திருத்த ஆண்டாக பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பெட்ரோல்-டீசல் விலை லிட்டருக்கு 2 ரூபாய் உயர்ந்துள்ளது.

*மத்திய அமைச்சரவை*

பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம் மற்றும் வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டத்தை 2025-26-ஆம் நிதியாண்டு வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை

அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இத்திட்டத்தின் கீழ் காப்பீடு செய்த விவாசாயிகளில் 88 சதவிகிதம் பேர் சிறு மற்றும் குறு விவசாயிகள் என்றும் இவர்களில் 57 சதவிகிதம் பேர் ஓபிசி, எஸ்சி, மற்றும் எஸ்டி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தார். கடந்த 8 ஆண்டுகளில் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் 1 லட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

டி ஏ பி உரங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும் சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் மெட்ரிக் டன் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாய் வீதம் வழங்கும் திட்டத்தை நீட்டிக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார். இதன் மூலம் விவசாயிகளுக்கு 50 கிலோ எடை கொண்ட டிஏபி உரம் மூட்டை ஒன்றுக்கு ஆயிரத்து 350 ரூபாய் விலையில் தொடர்ந்து கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

*ஒரே நாடு-ஒரே சந்தா*

ஆராய்ச்சிக் கட்டுரைகள், இதழ்கள், மற்றும் கல்வி சார்ந்த படைப்புகளை இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யும் வகையில் ஒரே நாடு-ஒரே சந்தா திட்டத்தை மத்திய அரசு இன்று தொடங்கி உள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த 3 ஆண்டுகளுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு முறை மட்டும் சந்தா செலுத்தி டிஜிட்டல்

வடிவிலான ஆராய்ச்சி கட்டுரைகள், இதழ்கள் உள்ளிட்டவற்றை மாணவர்கள் பதிவிறக்கம் செய்யும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இது குறித்த ஒரு தகவல் தொகுப்பு.........

(வாய்ஸ்)

*ராஜ்நாத் சிங்*

பாதுகாப்புத் துறையில் தற்போதைய மற்றும் எதிர்கால சீர்திருத்தங்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நடப்பு 2025-ஆம் ஆண்டு சீர்திருத்த ஆண்டாக பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. புத்தாண்டை முன்னிட்டு புதுடெல்லியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் இன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. பாதுகாப்பு அமைச்சகத்தின் அனைத்து செயலாளர்களும் பங்கேற்ற இக்கூட்டத்தில் பல்வேறு முக்கிய திட்டங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. பாதுகாப்பு படைகளை நவீன மயமாக்கும் நடவடிக்கையில் சீர்திருத்த ஆண்டு முக்கியமான ஒரு மைல் கல்லாக இருக்கும் என்று திரு ராஜ்நாத் சிங் நம்பிக்கை தெரிவித்தார். சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதால் முப்படைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு எந்தவித சவாலையும் எதிர்கொள்ளும் சக்தியுடன் அதிநவீன தொழில் நுட்பங்களைக் கொண்டதாக விளங்கும் என்றார். உள்நாட்டில் ராணுவ தளவாடங்களின் உற்பத்தியை

அதிகரிப்பது, உற்பத்தி கட்டமைப்பின் தரத்தை மேம்படுத்துவது, கொள்முதல் நடவடிக்கைகளை அதிகரிப்பது, செயற்கை நுண்ணறிவு, ட்ரோன் பயன்பாடு, சைபர் போர்த்திறன்களின் பயன்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளிக்க வழிவகை செய்வது உள்ளிட்டவை இந்த சீர்திருத்த ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. ராணுவம் தொடர்பான ஆராய்ச்சி மேம்பாட்டிற்கு அதிக கவனம் செலுத்தவும், ஓய்வுபெற்ற ராணுவ வீரர்களின் நலன்களுக்கான திட்டங்களை செயல்படுத்தவும், சீர்திருத்த ஆண்டு வழிகோல்வதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*நீர் முழ்கி கப்பல்*

இந்திய கடற்படை உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நீலகிரி, சூரத் மற்றும் வாக்ஷீர் ஆகிய 3 நீர் மூழ்கி கப்பல்களை கடற்படையுடன் இணைக்கும் விழா இம்மாதம் 15-ஆம் தேதி மும்பை கடற்படை தளத்தில் நடைபெறுகிறது. இந்த புதிய 3 நீர் மூழ்கி கப்பல்களையும் இணைப்பதன் மூலம் இந்திய கடற்படையின் போர்த் திறன் அதிகரிக்கும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எதிரிகளால் எளிதில் கண்டறிய முடியாத வகையில் பயணிக்கும் திறனுடன் நீலகிரி கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது. சூரத் நீர் மூழ்கி கப்பலானது மறைந்து சென்று எதிரிகளின் இலக்குகளை தாக்கி அழிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. வாக்ஷீர் நீர் மூழ்கி கப்பல் அதிக சத்தத்தை

வெளியிடாத டீசல் மற்றும் மின்சாரத்தில் இயங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நீர் முழ்கி கப்பல் உலகில் ஒரு சில நாடுகளிடம் மட்டுமே உள்ளது. இந்த 3 அதிநவீன நீர் மூழ்கி கப்பல் உருவாக்கப்பட்டதன் மூலம் இந்தியாவின் போர்க்கப்பல்களின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை காட்டுவதாக உள்ளது என்று இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி-புத்தாண்டு*

புதுச்சேரியில் புத்தாண்டை ஒட்டி இன்று அதிகாலையிலேயே ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. இதில் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். ஸ்ரீ மணக்குள விநாயகர் கோவிலில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், இன்று சாமி தரிசனம் செய்தார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. புதுச்சேரியில் புத்தாண்டு கொண்டாட்டம் முடிந்த நிலையில் அதுகுறித்து எமது செய்தியாளர் தரும் கூடுதல் தகவல்...................

(வாய்ஸ்)

*பெட்ரோல்-டீசல்*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பெட்ரோல்-டீசல் விலை லிட்டருக்கு 2 ரூபாய் உயர்ந்துள்ளது. புதுச்சேரியில் பெட்ரோல் மீதான

வாட் வரி 2.44 சதவிகிதமும் டீசல் மீதான வாட் வரி 2.57 சதவிகிதமும் உயர்த்துவதற்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் அனுமதி அளித்த நிலையில் கடந்த 27-ஆம் தேதி இதற்கான உத்தரவு வெளியிடப்பட்டது. இதன்படி இன்று முதல் பெட்ரோல்-டீசல் மீதான விலை உயர்வு அமலுக்கு வருகிறது. இதன்படி புதுச்சேரி பகுதியில் 94 ரூபாய் .26 பைசாவாக இருந்த பெட்ரோல் விலை 96 ரூபாய் 24 பைசாவாகவும், காரைக்காலில் 94 ரூபாய் 3 பைசாவில் இருந்து 96 ரூபாய் 3 பைசாவாகவும் மாகேவில் 91 ரூபாய் 92 பைசாவில் இருந்து 93 ரூபாய் 92 பைசாவாகவும், ஏனாமில் 94 ரூபாய் 92 பைசாவில் இருந்து 96 ரூபாய் 92 பைசாவாகவும், உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோல புதுச்சேரியில் டீசல் லிட்டருக்கு 86 ரூபாய் 47 பைசாவாகவும், காரைக்காலில் 84 ரூபாய் 35 பைசாவாகவும், மாகேயில் 81 ரூபாய் 90 பைசாவாகவும், ஏனாமில் 84 ரூபாய் 75 பைசாவாகவும், விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

*நிலத்தடி நீர்*

நாடு முழுவதும் கடந்த ஆண்டு நிலத்தடி நீர் மட்டம் 446 பில்லியன் கனமீட்டருக்கும் அதிகமான அளவிற்கு உயர்ந்துள்ளதாக மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் 2024-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நிலத்தடி நீர் ஆதார மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுப் பேசிய அவர், 2023-ஆம் ஆண்டை விட

2024-ஆம் ஆண்டு நிலத்தடி நீர் மட்டம் 15 பில்லியன் அதிகமான அளவிற்கு உயர்ந்துள்ளதாக தெரிவித்தார். நாடு முழுவதும் அனைத்து விதமான பயன்பாட்டிற்கும் ஏறக்குறைய 245 பில்லியன் கன மீட்டருக்கும் அதிகமான நிலத்தடி நீர் எடுக்கப்படுவதாக தெரிவித்தார். மத்திய நிலத்தடி நீர் வாரியமும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் இணைந்து மேற்கொண்ட நிலத்தடி நீர் குறித்த ஆய்வில் வடகிழக்கு மாநிலங்களில் 100 சதவிகிதம் நிலத்தடி நீர் ஆதாரங்கள் பாசனத்திற்கு உரியதாக இருப்பதும், நாட்டில் மற்றப் பகுதிகளில் உள்ள 73 சதவிகித நிலத்தடி நீர் ஆதாரங்கள் பாதுகாப்பானவை என்றும், 3 சதவிகிதம் பயன்படுத்த முடியாத அளவிற்கு உள்ளது தெரிய வந்ததாகவும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பாதுகாப்பு அதிகாரி*

முப்படை தளபதிகளுக்கான ஏ டி சி எனப்படும் தனிப் பாதுகாப்பு அதிகாரி இன்று முதல் சகோதரப் படைகளை சேர்ந்தவர்களாக நியமிக்கப்பட உள்ளனர். இதுவரை ராணுவம், கடற்படை, மற்றும் விமானப்படையின், தலைமை தளபதிகளுக்கு அந்தந்த படைப் பிரிவைச் சேர்ந்தவர்களையே பாதுகாப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு வந்த நிலை தற்பொழுது மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, ராணுவ தளபதி

ஜென்ரல் அனில் சவ்கான் தமது தனி பாதுகாப்பு அதிகாரியாக விமானப்படை அதிகாரியை தேர்ந்தெடுத்துள்ளார்.

வருமானவரி

2024-25-ஆம் நிதியாண்டிற்கான தாமதமான மற்றும் திருத்தப்பட்ட வருமானவரி கணக்குகளை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் இம்மாதம் 15-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வருமானவரி கணக்கு தாக்கல் செய்ய டிசம்பர் 31-ஆம் தேதி அதாவது நேற்று வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. வரி செலுத்துவோர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வருமான வரித்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

வைஷ்ணவ தேவி ஆலயம்-

ஜம்மு-காஷ்மீரில் உள்ள வைஷ்ணவ தேவி ஆலயத்தில் கடந்த 2024-ஆம் ஆண்டு சுமார் 95 லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்துள்ளதாக அக்கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கை கடந்த 2023-ஆம் ஆண்டு 42 ஆயிரமாக இருந்தது. தீவிரவாத அச்சுறுத்தல், மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தல்கள் நடைபெற்ற போதிலும் வைஷ்ணவ தேவி ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது என்று ஆகாஷிவாணி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*வானிலை*

இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த 3 நாட்களுக்கு தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீனவர்கள்*

இலங்கை கடற்படையால் ஓராண்டுக்கு முன்பு கைது செய்யப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 20 மீனவர்களை அந்நாட்டு நீதிமன்றம் விடுதலை செய்ததை அடுத்து இன்று சென்னை வந்து சேர்ந்தனர். விமான நிலையத்தில் அவர்களை வரவேற்ற தமிழக மீன்வளத் துறை அதிகாரிகள் அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர். எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாக புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் ஓராண்டுக்கு முன்பு கைது செய்யப்பட்டனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டம் மற்றும் வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டு திட்டத்தை 2025-26-ஆம் நிதியாண்டு வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், இதழ்கள், மற்றும் கல்வி சார்ந்த படைப்புகளை இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யும் வகையில் ஒரே நாடு-ஒரே சந்தா திட்டத்தை மத்திய அரசு தொடங்கி உள்ளது.

எதிர்கால சீர்திருத்தங்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நடப்பு 2025-ஆம் ஆண்டை சீர்திருத்த ஆண்டாக பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பெட்ரோல்-டீசல் விலை லிட்டருக்கு 2 ரூபாய் உயர்ந்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

.

--------------------------------